5th November 1965]

முயற்சி. ஆனல், இப்பொழுது இருக்கக்கூடிய நெருக்கடி நிலைமையில் இதற்கெல்லாம் ஒரு முக்கியமான இடம் கொடுக்கப்படுமா என்பதுபற்றி பார்க்கவேண்டும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நாற்றம் எப்பொழுதும் தொடர்ந்து இருக்கும். துர்நாற்றமா அல்லது நல்ல நாற்றமா என்பதுதான் பிரச்னை. நாற்றம் என்ருல் அது 'தொடர்கதை' போல தொடர்ந்துதான் இருக்கும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கூவம் ஆற்றில் தண்ணீர் தேங்கி நிற்பதால்தான் நாற்றம் உண்டாகிறது என்ற கருத்து இருந்து வருகிறது. ஆகவே, கூவம் ஆற்றில் தண்ணீர் தேங்காமல் ஓடிக் கொண்டிருப்பதற்கு என்ன வழிவகைகள் செய்யப்படும்?

கனம் திரு. வெ. ராமையா : எப்பொழுதும் மழை காலத்தில் தண்ணீர் ஓடிக்கொண்டு தான் இருக்கிறது. மழை இல்லாதபோது தண்ணீர் தேங்கி நிற்கிறது. தண்ணீர் தொடர்ந்து ஓடிக் கொண்டிருப்பதற்கு கால்வாயை ஆழப்படுத்த வேண்டும். சமுத்திர தண்ணீர் இங்கே வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதற்காகத்தான் இவ்வளவு பெரிய திட்டம் போடப்பட்டிருக்கிறது.

திரு. ம. கமலநாதன் : நாகப்பட்டினம் துறைமுகத்திற்கு வேதாரண்யம் கால்வாயைக் கொண்டுபோகும் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதா? தனியாக அதற்காக மத்திய அரசாங்கத்தின் உதவி கிடைக்குமா?

கனம் திரு. வெ. ராமையா : இவையெல்லாம் இப்பொழுது பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றன. திட்டம் பரிபூரணமாக பரிசிலனை செய்யப்பட்டு நடைமுறைக்கு வரக்கூடிய சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை.

திரு. வை. சங்கரன் : குறிப்பாக கூவம் நதி நம்முடைய கூட்டுறவு அமைச்சர் அவர்களுடைய வீட்டிற்குப் பக்கத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. அந்தப் பக்கம் ரோடில் போனல் நாற்றம் சகிக்க முடியவில்லை. ஆனல் கூட்டுறவு மந்திரி இந்த நாற்றத்தை எவ்வாறு சகித்துக்கொண்டிருக்கிருரோ தெரியவில்லை. மந்திரிகள் நலமாக இருந்தால் தான் மக்கள் நன்ருக இருக்க முடியும். ஆகவே, இதைக் கருதியாவது சர்க்கார் கூவம் நதியை நல்ல முறையில் துப்புரவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் மந்திரி அவர்களை நேரடியாகப் பார்த்தால் நன்ருகத்தான் இருக்கிருர் என்பது தெரியவரும். நாற்றத்தினல் ஒன்றும் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதை மருத்துவ நிபுணர்கள் கூறியிருக்கிருர்கள்.

பாரத் சேவக் சமாஜம்

*302 **கேள்வி—திரு. மு. கருணநிதி :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) சென்னையிலுள்ள பாரத் சேவக் சமாஜத்திற்கு பொதுப் பணித்துறை ஏதேனும் காண்டிராக்ட் விட்டிருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[5th November 1965

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*)

Serial number.	*Details of works.*
1.	Providing 22 feet width B.T. in Madras-Thiruvellore Road K.M. 38/1 to 4.
2.	Improvements to Poondi Regulater to Ramanjeri Road K.M. 2/5 to 11/2.

திரு. இராம. அரங்கண்ணல்: மந்திரி அவர்களைத் தமிழிலும் பதில் அளிக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா: (அ) ஆம்.

(இ)

தொடர் எண்.	வேலை விவரங்கள்.
1.	38/1 முதல் 38/4-வது கிலோ மைல் வரை சென்னை-திருவள்ளூர் சாலையில் 22 அடி அகலமுள்ள தார் சாலையைப் போடுவது.
2.	பூண்டி ரெகுலேட்டர் ராமஞ்சேரி சாலையை 2/5 கிலோ மீட்டரிலிருந்து 11/2 கிலோ மீட்டர் வரை அபிவிருத்தி செய்தல்.

திரு. இராம. அரங்கண்ணல்: பாரத் சேவக் சமாஜம் சில பொது நோக்கங்களைக் கொண்டது. பொது நோக்கங்களுக்காகப் பாடுபடவேண்டும் என்ற விதிகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு பொது வாழ்வுக் கழகத்தைத் தனிப்பட்ட காண்டிராக்ட் முறையில் ஏன் ஈடுபடுத்தவேண்டும் ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் பல பொதுத் தொண்டுகள் செய்யவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். அதுவும் சிக்கனமாக பொது மக்களுடைய நன்மைக்காகச் செய்து கொடுக்கவேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த முறையிலே அவர்களுக்கு உதவி செய்யக் கூடிய வழியிலே எங்கே அவர்களால் பொதுத் தொண்டு செய்ய முடியுமோ, அதற்கு அரசாங்கம் ஆதரவு கொடுக்கிறது.

திரு. கரு. சிமைச்சாமி: சமாஜத்திற்குக் கொடுக்கப்பட்ட சாலை வேலைகள் டெண்டர் மூலம் கொடுக்கப்பட்டதா? அல்லது 'நாமினேஷன்' மூலம் கொடுக்கப்பட்டதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த நேரத்தில் இருக்கக்கூடிய மார்க்கெட் ரேட் அடிப்படையிலே கொடுக்கப்பட்டது.

திரு. இராம. அரங்கண்ணல் : பொதுச் சேவையிலே ஈடுபட்டிருக்கக் கூடிய இந்த சமாஜத்திற்கு இப்படிப்பட்ட வேலைகளைக் கிராமப்புறத்தில் செய்வதற்கான முறையிலே கொடுக்கலாம் அல்லவா? டிரங்கு ரோடு வேலையை அவர்களிடம் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது ?

5th November 1965]

கனம் திரு. வெ. ராமைய்யா : எங்கே அவர்கள் வேலை செய்ய முன்வருகிறார்களோ, எங்கே அரசாங்க உதவியைக் கேட்கிறார்களோ, அங்கெல்லாம் கவனிக்கப்பட்டு, சாத்தியமான இடங்களில் இந்த வேலைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன.

திரு. கரு. சீமைச்சாமி : நான் கேட்ட கேள்வி, டெண்டருக்கு விடப்பட்டதா அல்லது நாமினேஷன் மூலம் கொடுக்கப்பட்டதா என்பது. அமைச்சர் அவர்கள் மார்க்கெட் ரேட் என்று சொல்லுகிறார்கள்.

கனம் சபாநாயகர் : அதனால் டெண்டர் இல்லை என்று அர்த்தம்.

திரு. கரு. சீமைச்சாமி : டெண்டர் இல்லை என்றால், எது வேண்டுமானாலும் கொடுக்கலாம். சமாஜம் பொதுச் சேவை செய்வதற்கு ரோடு வேலை இல்லாமல் வேறு நல்ல வேலைகள் இருக்குமே, அரசாங்கம் அதைப்பார்த்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஏற்பாடு செய்யலாமே?

கனம் திரு. வெ. ராமைய்யா : ரோடு வேலை மட்டும் அல்ல, சமாஜம் ஏராளமான வேலை செய்துகொண்டிருக்கிறது அந்த வேலைகளைப்பற்றி விவரம் கொடுக்கவில்லை. அரசாங்கத்தினிடமிருந்து அவர்கள் ஒரு சில வேலைகளை எடுத்துச் செய்கிறார்கள். அதுபோன்று எடுத்துச் செய்கின்ற இரண்டு வேலைகளைக் குறிப்பிட்டேன். சமாஜம் செய்கின்ற அத்தனை வேலைகளுக்கும் பட்டியல் கொடுக்கவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கூட்டுறவு சொஸைடிகளுக்கு டெண்டர் போடாமல் காண்டிராக்ட் கொடுக்க மறுக்கும்பொழுது, இப்படிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு டெண்டர் இல்லாமல் காண்ட்ராக்டுக்கு விடுவது அந்த ஸ்தாபனங்களுக்கு மறைமுகமாக சப்சிடி கொடுக்கப்படுகிறது என்கின்ற குற்றச்சாட்டிற்கு இடம் ஏற்படும் ஆகையால், இந்த முறை கைவிடப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது பாரத் சேவக் சமாஜத்தில் ஈடுபட்டிருக்கக்கூடிய பொதுநல ஊழியர்கள், அந்த வட்டாரத்தில் தொண்டு செய்பவர்களுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும் என்பதற்காக, அவர்களுக்குப் பல சலுகைகள் கொடுக்க வேண்டுமென்ற முறையில், பொதுத் துறையிலே மற்றத் திட்டங்களில் ஈடுபட்டு செயல்படுகிறார்கள். இந்தக் கேள்வியில் எழுப்பப்பட்டிருப்பது பி. டபிள்யூ. டி. இலாகாவைப் பொறுத்தவரையில் ஏதேனும் விசேஷமான வேலை வாய்ப்புகளைக் கொடுத்தார்களா என்பதுதான் ரோடுகளைப் பொறுத்தவரையிலே அவர்கள் இந்த வேலைகளை எடுத்து, இந்த வசதி பெற்று செய்திருக்கிறார்கள். நான் குறிப்பிட்டதுபோல மார்கெட் ரேட் என்று நிர்ணயம் செய்ததற்குப் பிற்பாடு, அதிகமான சலுகை கொடுப்பதற்கு இடம் இருக்காது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு தொகைக்கு காண்டிராக்ட் விடப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா ?

[5th November 1965

கனம் திரு. வெ. ராமையா : எஸ்டிமேட் காஸ்டு ரூ. 1,92,000. Improvements to Poondi Regulator to Ramanjeri Road, ரூ. 14,400.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : சமாஜத்தைச் சேர்ந்தவர்கள் பெரும் பகுதியினர் காங்கிரஸ்காரர்கள் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஆகவே, காங்கிரஸ்காரர்களுக்கு மறைமுகமாக சில சலுகைகள் செய்வதற்குத் தான் இம்மாதிரி காண்டிராக்ட் டெண்டர் முறை இல்லாமல் விடப்பட்டதா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்த சமாஜத்தில் இருக்கக் கூடியவர்களின் பட்டியலைப் பார்த்தால், ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல, பொதுவாக அரசாங்கத்தில் இருக்கக்கூடிய வர்களும், மற்றவர்களும், சமாஜத்தில் தொண்டு செய்யக்கூடியவர் களும் என்ற அடிப்படையில் அமைந்திருக்கிறது அந்தப் பட்டியல் என்பது தெரியும். ஏதாவது ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள், அதற்காக சலுகை கொடுப்பது என்பது தவறான கருத்து.

திரு. கே. ஆர். ஆர். எம். கரியமாணிக்கம் அம்பலம் : ஸார் தொண்டு செய்வதற்கு காண்ட்ராக்ட் எடுத்துத்தான் செய்ய வேண்டும் என்பதில்லை. தொண்டு செய்பவர்கள் தாங்களாகவே முன்வந்து செய்யவேண்டும். இப்படிப்பட்ட காரியங்களில் அரசாங்கம் காண்ட்ராக்ட் கொடுத்து வேலை செய்வது, நிரந்தரமாக அந்த ஸ்தாபனத்தின் தொண்டு செய்யும் நோக்கத்திற்குக் கெடுதல் விளைவிக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : பாரத் சேவா சமாஜத்தின் தொண்டு இந்த இரண்டு வேலைகளோடு நிற்கவில்லை. அவர்கள் ஏராளமான நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள். அப்படிச் செய்யும் போது, இதுபோன்ற தொண்டுகளிலும் முயற்சி எடுக்க வேண்டும் என்று முன்வந்தார்கள். அதன்பேரில் அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்ய முன்வந்தது. அவர்கள் என்ன வேலையை எப்படிச் செய்யவேண்டும் என்று நாம் சொல்ல வேண்டிய தில்லை. அவர்கள் செய்யும் வேலைகள் இந்தியாவிலேயே பாராட்டக் கூடிய முறையில் செய்யப்படுகின்றன. மற்ற இராச்சியங்களில் பெரிய பெரிய அணைக்கட்டுகள் போன்றவற்றைக் கூட கட்டு கிறார்கள். அவர்களுடைய தொண்டு இந்த காண்ட்ராக்டோடு நின்று விடவில்லை.

திரு. க. ர. நல்லசிவம் : சார், காண்ட்ராக்ட் என்பது ஒரு வியா பாரம் போன்று லாபத்திற்காகச் செய்யப்படுவது. ஆகவே, பொது நல நோக்கோடு உள்ள இப்படிப்பட்ட ஸ்தாபனத்தின் பெயர் குன்றிவிடாமல், அவர்களுக்குப் பாதகம் ஏற்படாமல் இருக்க, இப்படிப்பட்ட காண்ட்ராக்டுகளை அவர்களுக்குக் கொடுக்காமல் இருக்க அரசாங்கம் யோசிக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : பாரத் சேவக் சமாஜத்தின் வேலை களைப் பொறுத்தவரையில், எங்கள் அனுபவத்தில், இதுபோன்ற வேலைகளுக்கு அவர்கள் வரவே தயாராக இருக்க மாட்டார்கள். மற்றவர்கள் கொள்ளை லாபம் அடிப்பதைத் தவிர்க்கலாம் என்று

5th November 1965]

தான் இந்த வேலைகளில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த வேலை அவர்களுக்குப் பொருத்தமே இல்லை என்பதால்தான் அவர்கள் அதிகமான வேலைகளுக்கு வரவில்லை என்பதை நிரூபிக்க முடியும்.

திரு. ஈ. ஜீவரத்தினம்: தலைவர் அவர்களே, என்னுடைய நகரத்திலே பாரத் சேவக் சமாஜம் இரவு பாடசாலை நடத்துகிறது, அதோடு பகலிலே பள்ளிகள் நடத்தியும், ஏழை மாணவர்களுக்கு உதவிகள் செய்தும், கிராமங்களில் ரோடுகள் போடுவது போன்ற பணிகளும் செய்கிறார்கள். அவர்களை ஊக்குவிக்கும் முறையில், மேலும் மேலும் இப்படிப் பட்ட காண்ட்ராக்டுகளை அவர்களுக்குக் கொடுக்க சர்க்கார் உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: கனம் அங்கத்தினரைப் போல் பாரத் சேவக் சமாஜத்தின் வேலையைப் புரிந்து கொண்டவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் ஏராளமான தொண்டுகள் செய்கிறார்கள். அவர்கள் காண்ட்ராக்ட் எடுக்கும் அடிப்படையில் அமையவில்லை.

திரு. சா. கணேசன்: "பாரத் சேவக் சமாஜ் பிற கண்ட்ராக்டர்கள் கொள்ளை லாபம் அடிப்பதைத் தவிர்க்க இம்மாதிரி வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்" என்று பொருள்படும்படி கனம் அமைச்சர் விடை வந்தார்கள். அப்படியானால் பிற கண்ட்ராக்டர்கள் டெண்டர் போடும்போது மிகக் குறைவாகப் போடும் அளவுக்கு வாய்ப்பு இருக்கும் போது, இப்படி நேரிடையாகக் கொடுக்கும் நிலை ஏற்படுவது முறையாகாது என்கிற உணர்ச்சி பொதுமக்களிடையே இருப்பதனால், அதைத் தவிர்க்க, இந்த ஸ்தாபனத்தின் நல்ல பெயரை, ஒழுங்குகளைக் காப்பதற்காவது இந்த முறையை நிறுத்தி விட அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: நான் திரும்பவும் சொல்ல விரும்புவது, பாரத் சேவக் சமாஜத்தின் நோக்கம், அமைப்பு இவற்றைப் பார்த்தால், அவர்கள் காண்ட்ராக்ட் எடுக்கும் நிலையில் இல்லை. அவர்கள் பல பொதுத் தொண்டுகளில் ஈடுபடுகிறார்கள். சமுதாயத்திற்குத் தொண்டு செய்யவேண்டும் என்று அப்படி ஈடுபடுகிறார்கள். அப்படியிருக்கும் போது இம்மாதிரியான காண்ட்ராக்ட் வேலைகளிலும் அவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதுவதில் நன்மை இருப்பதால், அவர்களுக்கு உதவி செய்யும் முறையில் இப்படிப்பட்ட வேலைகள் கொடுக்கப் பட்டன.

திரு. சா. கணேசன்: பாரத் சேவக் சமாஜ் பல கோடி ரூபாய்களுக்குக் கணக்குகள் சமர்ப்பிக்கவில்லை என்ற குற்றச்சாட்டை மத்திய ஆட்சி கணக்குப் பரிசோதகர், ஆடிட்டர்-ஜெனரல், குறிப்பிட்டு இருப்பதை இன்னும் தீர்க்காத நிலையில் அதற்குத் துணை செய்வது போல இந்த முறை இருக்கக் கூடாது என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[5th November 1965

கனம் திரு. வெ. ராமையா: இந்த வேலைகளைப் பொறுத்த வரையில், அவர்கள் வேலைகளைச் செய்துமுடித்து போதுமான திருப்தி அளித்திருக்கிறார்கள்.

திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, காண்ட்ராக்ட் என்றாலே கொள்ளை லாபம் அடிப்பது என்றும் அதைத் தவிர்க்கவே பாரத் சேவக் சமாஜம் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறது என்றும் சொன்னால், அவர்களும் கண்ட்ராக்டர்கள் போல கொள்ளை லாபம் அடிக்கிறவர்களாக மாறிவிடுவார்களோ! என்கிற அச்சம் இருப்பதனால், அவர்கள் நல்லவர்களாக இருக்க, இந்த காண்ட்ராக்ட் கொடுப்பதைத் தவிர்க்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: கண்ட்ராக்டர்கள் என்றாலே கொள்ளை லாபம் அடிப்பவர்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. சில நேரங்களிலே இப்படிப்பட்ட வேலைகளைக் குறிப்பிட்ட தொகைக்கும் குறைவாகச் செய்யவேண்டும் என்று இவர்கள் சமூக ஊழியர்கள் என்கிற முறையிலே இந்த வேலைகளில் ஈடுபடுகிறார்கள். அவர்களே இப்படிப்பட்ட வேலைகள் தங்களுக்கு லாயக்கு இல்லை என்று விட்டு விடுகிறார்கள் என்பதுதான் என்னுடைய தகவல். இந்த இரண்டு வேலைகள் சம்பந்தப்பட்ட வரையில், இவற்றைச் செய்து அரசாங்கத்திற்கு நஷ்டம் இல்லாமல் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், இந்தப் பணிகளைப் பாரத் சேவக் சமாஜத்திற்குக் கொடுத்தது, அரசாங்கத்தின் முன் அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டதா அல்லது அதிகாரிகளே செய்திருக்கிறார்களா? இது போன்ற மற்ற தனிப்பட்ட கண்ட்ராக்டர்கள் கொள்ளை லாபம் அடிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கமா அல்லது தனிப்பட்டவர்கள் அடிக்கும் கொள்ளை லாபத்தை இப்படிப்பட்ட ஸ்தாபனங்கள் அடிக்க வேண்டும் என்பது நோக்கமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: கண்ட்ராக்டர்கள், லாபம் அடிப்பது என்ற பிரச்சினை ஒன்றும் இல்லை. பாரத் சேவக் சமாஜம் பல பணிகளை, தொண்டுகளைச் செய்கிறார்கள். இந்த வேலையையும் எடுத்துச் செய்யவேண்டும் என்று ஓரிருவர் ஆசைப்பட்டார்கள். சிக்கனமாகச் செய்ய முடியும் என்பதை நிரூபிக்க சந்தர்ப்பம் தர வேண்டும் என்று கேட்டார்கள். அந்த முறையில் அவர்களுக்குச் சலுகை கொடுக்கப்பட்டது.

திரு. இராம. அரங்கண்ணல்: பாரத் சேவக் சமாஜத்தின் உயரிய நோக்கங்களைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். உயரிய நோக்கம் கொண்ட ஸ்தாபனங்களும் வியாபார வகையில் ஆகிவருவதை நாம் பார்க்கிறோம். ஆகவே இந்த ஸ்தாபனத்தை இனிமேலாவது இப்படிப்பட்ட பணிகளில் ஈடுபடுத்தாமல் இருப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: நாம் செய்ய வேண்டாம். அவர்களே இருக்கக் கூடிய நிலையில் எவ்வளவோ வேலைகள் இருந்தாலும், இரண்டு சிறிய வேலைகளைத்தான் எடுத்துச் செய்ய முன்வந்தார்கள்.

5th November 1965]

மராமத்து இலாகா, நீர்ப்பாசன இலாகா வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. இந்த இரண்டு வேலைகளில் மட்டும் ஆர்வம் காட்ட முன்வந்ததால் அரசாங்கம் அவர்களுக்குச் சலுகைகள் கொடுத்தது.

பொறையாருக்கு அருகே சோழர் காலத்துச் சிலைகள்

■ 303 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டம் பொறையாருக்கு அருகே 1965-ம் ஆண்டு மே திங்களில் சோழர்காலத்துச் சிலைகள் அகப்பட்டன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவை யாவை ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Five idols were unearthed on 3rd May 1965 in Udaiyarkoilpattu village, Mayuram taluk in Thanjavur district and it cannot be definitely stated whether they belong to the Chola period.

(b) The idols are—

(1) Ganapathi (standing posture)—1 foot 4 inches.
(2) Gnanasammandar (dancing posture)—1 foot 9 inches.
(3) Ambikai (standing posture)—2 feet 6 inches.
(4) Somaskandar (sitting posture)—1 foot 5 inches.
(5) Somaskandar Ambal (sitting posture)—1 foot 2 inches.

தாசில்தார்களுக்கு ஜீப் கார்கள்.

* 304 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : } திரு. கரு. சீமைச்சாமி : } கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) தாசில்தார் தங்களுடைய வேலைகளைத் துரிதமாகக் கவனிப்பதற்கு ஜீப்புகள் வழங்கக்கோரி மாவட்ட கலெக்டர்கள் மகாநாட்டில் கோரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அவ்வாறு வழங்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) Yes. The Government have approved the proposal of the Board of Revenue for supply of jeeps to all Taluk Tahsildars on a phased programme covering a period of three years. To start with, the purchase of 19 jeeps during 1965–66 has been sanctioned.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: சார், தாலுகா தாசில்தார்களுக்கு ஜீப் வழங்குவதோடு, தனித் தாசில்தார்களுக்கும் ஜீப்கள் வழங்க அரசாங்கம் முன்வருமா ?